Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939,

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28 ஆம் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்—௬௩] யாழ்ப்பாணம்:- விகிர்தி௵ பங்குனி௴ ௨௪௨ வெள்ளிக்கிழமை (6 ஏப்ரல் 1951) [இல.—௨]

L. K. S LEBBAY BROS
GOLD HOUSE

எல். கே. எஸ். லெப்பை பிரதர்ஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## காலொன்றை யிழந்தார்

கல்பொடையைச் சேர்ந்த ஒரு தோட்டத்தில் லேகசாராகக் கடமை பார்த்து வரும், பெரியசாமி யென்னுமொரு வாலிபர், சென்ற புதன்கிழமை இரவு காவலப்பிட்டிப் புகைரத ஸ்தானத்திற் புகைரதத்தில் ஏறமுயன்றபோது அடி தவறிப் புகைவண்டிக்கும் புகைரத மேடைக்குமிடையே வீழ்ந்துவிட, புகைரதச்சில் அவர் காலொன்றை செரித்துவிட்டமையின் அக்கால் அகற்றப்பட்டுவிட்டது; அவர் இப்பொழுது காவலப்பிட்டி அரசினர் வைத்தியசாலையில் ஆபத்தான நிலையிற் கிடக்கின்றாராம். அவருக்குச் சில தினங்களில் விவாகம் நடப்பதாக நிச்சயிக்கப்பெற்றிருந்ததாம்.

## இந்து இளைஞர் வாசகசாலைக் கூட்டம்

இக் கூட்டம் சென்ற 24-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணி அளவில் திரு R. C மன்மதராயன் தலைமையில் நடைபெற்றது. அடுத்த வருடத்துக்குப் புதிய உத்தியோகத்தர்களும் அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப் பெற்றனர்.

—— —நிரு.

## அநுராதபுரத்திற் சிறந்த விடுதிவிடமைக்கும் நோக்கம்

அநுராத புரத்திலே மூன்றடுக்கோடு கூடியதும், புத்தகசாலை பூந்தோட்டமென்னு நிலைகளைக்கொண்டதுமாகிய சிறந்த விடுதிவிடொன்றமைக்கும்பொருட்டு இலங்கையரசினர் செலவாக 5 லட்சம் ரூபா வரித்துள்ளனராம்.

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

# சமயப் பணியின் பண்பு

"கடவுளைப்பற்றிய சமயத் துறையுள் நுழைவதற்குச் சிறந்த பெரியோர்களும் நடுங்குவர்; நிலைகப்பர். அத்துணை அரிய விஷயத்தில் சிற்றேனும் புகுந்து அறிவதற்கு முயன்றிட இயலாத தம் தகுதியின்மையை அற்பமும் கருதாமல் அதில் பலர் தலைகீழாகக் குதித்துக் குதர்க்கம் புரிகின்றனர்." இது புதுமையிலும் ஓர் இழிந்த புதுமையே எனக் கூறலாம் என்று கமகாட்டு அறிஞர் ஒருவர் கூறுவது சரியெனவே தோன்றுகிறது.

உலகம் தோன்றி எத்தனையோ பல்லாயிரம் ஆண்டுகளாக மனித குலம், தம் வாழ்க்கையின் வளர்ச்சி நாடி வருகின்றது. அதன் பொருட்டுத்தம முழு அறிவு ஆற்றல்களைக் கொண்டு பலபல விதங்களிலபலவழிகளில் முயன்றுதான் வந்து வருகின்றது. எனினும் இன்றளவும் பலன்பெற ஏழியற்யாது விழிப்பதாகவே காண்கின்றது. ஆனால் இன்றும் இனிமேலும் என்றும மனிதகுலம் விரும்பும் நல்வாழ்வின் வளர்ச்சிக்கு சிரிய நெறிகாட்டும் சமயம் மனிதனிடம் இயற்கனவே நீங்காது இருக்கவே இருக்கின்றது. அதை அவன் திருப்பிப் பார்த்து பயில முடல வேண்டுவதே. ஆனால் மனித வாழ்க்கையின் வளர்ச்சியென்பது, இரு புறமுமாக இருப்பதாம். அகவளர்ச்சி, புறவளர்ச்சி இரண்டுமாகும. சமயம் அகவளர்ச்சிக்குரியதாக மட்டும் சிலாற் கருதப்படலாம். அந்த அகவளர்ச்சியின் நிலைநுட்பங்களை விவரிததல் சிரமம் ஆயினும் மனிதனது அறிவை நல்லதெனக் கருதப்படும் மார்க்கத்தில் செலுத்த வல்லது சமயமே. அக வளர்ச்சி முக்கியமென்பதுபோலவே புறவளர்ச்சியும் முக்கியமானதே. இருவித வளர்ச்சிக்கும் சமயமே ஆதாரமாயுளது. சில காலம் சில இடங்களில் சமயமானது ஒருபக்க வளர்ச்சிக்கே நின்று மற்றைய வளர்ச்சிக்கு உதவும்முறையில் பிசகு ஏற்படுவதனாலேயே சமயக் குலைவுகள் நேர்வதெனலாம. இதையெல்லாம் நன்கு சிந்தித்துணட கழிந்தகால அனுபவங்களை உணர்ந்து இனிமேலாயினும் மனிதனது அகம் புறம் என்ற இருபுற வளர்ச்சிக்கும் பொருந்தச் சமயம் உதவும்படி நாம் சமயத்தைத் தெரிந்து சமயத்தைப் பேணிப்பயிலக் கடமைப்பட்டுள்ளோம். சமயப் பற்றுணர்ச்சியில் அழுந்தி நிற்போர்க்குப் பெருங்கடமையாம். மேலும் சமய வெறுப்பாளர்களால் நலம் தரும் வளர்ச்சிவேலை புரிய இயலாதென்பது போலவே சமய வெறி கொண்டவர்களாலும் உலகியலில் நலன்தரும் வளர்ச்சிவேலை செய்திட இயலாதென்பது சமயப் பற்றுடையோர் கருத்திலிருத்தல் நலம். குறுகிய நோக்கமும் வீண்வெறியும் கொண்ட வேலைகளால், பயன்தரும் வளர்ச்சிகளை எப்பொழுதும் சாதிக்கப்பட்டதில்லை; குறைகூறல் வீண் வெறிகளில் பலரைப் பின்தொடரச் செய்திடும் கவர்ச்சி காண்பதுண்மையே. ஆனால் அது வளர்ச்சிக்கு மாறாக அழிவிற்கே காரணமென்பது வெளிப்படை. அழித்தல் எளிது; ஆக்கலே கஷ்டமானது என்பதைச் சிந்தித்தல் நலமாம்.

இக்காலத்தில மனிதனுக்கு தன் தன் சுற்றுச் சார்புகளை மாற்றிவிடத் தெரிந்துளது; ஆனால் அவனுக்குத் தன்னை மாற்றிக்கொள்ளத் தெரிவது சிரமமாயிருக்கிறது: சமயத்தால் எழு தெய்வபக்தி என்பது எது? யாவற்றினும் உன்னத மகத்துவமுடைய ஒன்றனிடத்துக்கொள்ளும் அன்பே. சாதாரண பகுத்தறிவுக்குப் புலனாகாத பொருளிலே தான நம்பிக்கையும் பக்தியும் ஏற்படுவதியல்பு; நம அறிவுக்கு மேற்பட்ட விஷயத்தில் நம்பிக்கையும பக்தியும் கொள்வதறகு அவசியமே இல்லையே! கடவுள் அறியப்பட்டுவிட்டால கடவுளென்னும் பொருளேது? சொலலேது? இதை அறிவாளர் மனமிருத்திச் சுந்தித்தல் நலமாகும்.

உலகியலில் பல விஷயங்களில் அறிவு பெறுதற்கு கல்வித் துறைகளில் பயின்று தேர்ச்சிபெறவேண்டுமெனின், ஒருவன் முதலில் தன் சுய அறிவின் சக்தியைச் சந்தேகித்து மிகப் பணிவுடன் கல்வித்துறை வாசல் முன் சென்று பயிலவேண்டுவது அவசியமென்பது யார்க்கும் தெரியும. அங்ஙனமிருக்க போறி

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## ஸ்தோத்திரம்

வைத்ததேன் னிடத்தோர் வைப்புள தத்தை மதுரையிற் சண்டனன்மாதோ
கைத்தலத் திலங்கு முத்தலை வேற்றுக் கயல்விழிக் கரும்பொருபாற்றுப்
பைத்தலைப் பூட்டுப் பணைத்த வெண்தோட்டுடன் பாட்டினுக்கிரங்குபூந் தாட்டு
மூத்தரை யளந்த விடையுயர் கோடித்து மூன்றுகட்டிளமபிறை முடித்தே

தமியேனிடத்தில் மூர்த்தியே க்ஷேமித்து வைக்கப்பட்டதாகிய ஒரு (பழைய) புதையல் உள்ளது; அந்தப் பழைய புதையலை நான் மதுரைத்திருப்பதியிலேயே கண்டெடுத்தேன்; (அது எப்படிப்பட்டதென்றால்) திருக்கரத்திலே விளங்குகின்ற மூக்கருப் பொருந்திய சூலப்படையைப்பரித்தது, கயல் மற்சம் போன்றவிழிகளையுடைய கரும்புபோல் ரசிக்குந் திருமொழியமைந்த மீனாட்சியம்மையாரை இடப்பாகத்திற்கொண்டது, படம் பொருந்திய தலையையுடைய பாம்பை ஆபரணமாக அணிந்துள்ளது, திரண்ட வெள்ளிய (சங்கச்) குண்டலத்தையணிந்துள்ளது, தமியேன் பாடும் பிரபந்தங்கள் பொருட்டுத் திருவுளமிரங்குகின்ற அன்றலர்ந்த செந்தாமரைப் பூப்போன்ற திருவடிகளையுடையது, (சுவர்க்க மத்திய பாதலம் எனப்படும்) மூன்று உலகங்களையும் அளந்த (திருமாலாகிய) இடபக்கொடியை உயர்த்தியுள்ளது, மூன்று கண்களையுடையது, பிறைச்சந்திரன் பொருந்திய திருமுடியையுடையது என்பது பொருள்.

வைப்பு - புதையல், நிட்சேபம்; மாதோ அசை, முத்தலைவேற்று - முக்கருப் பொருந்திய சூலவேலையுடையது; பாற்று - பக்கலிற்கொண்டது, பூட்டு - பூணையுடையது; தோட்டு - தோட்டை (குண்டலத்தை) யுடையது; தாட்டு - தாளையுடையது; மூத்தரை - சுவர்க்க மத்திய பாதலம், கோடித்து - கொடியையுடையது: மூன்று கட்டு - மூன்று கண்களையுடையது; முடித்து - முடியையுடையது; இவை குறிப்பு வினை முற்றுக்கள்; மதுரையிற் கண்ட வைப்பு - சொக்கலிங்கப்பெருமான். [64]

# ஈழநாட்டு ஸ்தலங்கள்

### திருக்கதிர்காமம்:

இது தென்னிலங்கையிலுள்ள புராதன முருக ஸ்தலம். கொழும்பிலிருந்து புகைரத மார்க்கமாக மாத்தறைக்குச் சென்று, அங்கிருந்து பஸ் வண்டி மார்க்கமாக கதிர்காம ஸ்தலத்தை யடையலாம். கொழும்பிலிருந்து நேரே மோட்டார்வண்டி மூலமாகவும் செல்லலாம். அருணகிரிநாதரால் திருப்புகழ் மாலை சூட்டப்பெற்ற ஸ்தலம். கதிர்காமநாதன் ஆலயத்துக்கு அருகில் மாணிக்கக்கங்கையெனும் புனித நதி ஓடுகின்றது. பௌத்த அரசர்களும் இந்து மன்னர்களும் இவ்வாலயத்தை ஆதரித்து வந்தனர். இவ்வாலயத்தில் பூசை செய்வோர் கப்புராளைமார் எனப்படுவர். இங்கு நடைபெறும் பூசை முறை ஏனைய இந்து ஆலயங்களில் நடைபெறும் பூசை முறைக்கு வேறுபட்டது. ஆடி மாதத்தில் நடைபெறும் விழாவில் பல்லாயிரக்கணக்கான இந்துக்களும் பௌத்தர்களும் கலந்துகொள்வர். யாத்திரிகள் தங்குவதற்கு வசதியான மடங்கள் உண்டு.

### செல்லக்கதிர்காமம்:

கதிர்காமத்திலிருந்து 3 கல் தொலைவில் செல்லக்கதிர்காமம் எனும் ஸ்தலமுண்டு. கதிர்காமத்திலிருந்து 3, 4 கல் தொலைவில் கதிரமலை யென்னும் ஸ்தலமுண்டு.

### திருக்கேதீச்சரம்:

ஈழநாட்டிலுள்ள பாடல்பெற்ற இரு ஸ்தலங்களுள் ஒன்று. கொழும்பிலிருந்து தலைமன்னாருக்குச் செல்லும் புகைரதப் பாதையில் மன்னார் என்றொரு புகைரத ஸ்தானமுண்டு. இதில் இருந்து 6 கல் தொலைவிலுள்ள மாதோட்ட நகரில் இப்புராதன ஆலயம் உண்டு. சம்பந்த சுவாமிகளாலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் தேவாரம் பாடியருளப்பெற்ற புனித ஸ்தலம். பாலாவி யென்னும் தீர்த்த விசேஷம் வாய்க்கப்பெற்ற தலம். சோழவரசனும், யாழ்ப்பாணத்தரசர்களும் இதனை ஆதரித்து வந்தனர். இது போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டது. இவ்வாலயம் இருந்த இடத்தைச் சைவர்கள் விலைக்கு வாங்கி அதில் ஒரு சிறு ஆலயம் அமைத்தனர். கும்பாபிஷேகம் 1910 ம் ஆண்டில் நடைபெற்றது. புராதனப் பெருமைவாய்ந்த இவ்வாலயத்தை புனருத்தாரணம் செய்யும் திருப்பணியைத் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையினர் ஆரம்பித்துள்ளனர்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ் விகிர்தி ஞு பங்குனி மீ உச ௨ வெள்ளிக்கிழமை

## “அறிமால்”

அறிமால், அறிமடம், புல்லறிவு என்பன ஒருபொட் சொற்கள்; அறிமாலாவது தான் சிற்றறிவினனாகவேயிருந்துகொண்டு, தன்னைப் பேரறிவினனாக வைத்துத் தானே தன்னை நன்கு மதித்தல்; இதனை, “காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான்—கண்டானுந் தான்கண்டவாறு” என்னுந் திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய வுரையால் இனிது அறியலாகும். இந்த அறிமால் என்றவாக்கியத்தைப் புத்த குருவுடன் திருவாதவூரடிகள் சமயவாதஞ் செய்யத் தொடங்கியவிடத்து, அக்குருவின் அறியாமையை யிட்டுக் கூறியதாக, கடவுண்மாமுனிவர் பின்வருமாறு பாடியுள்ளார்:

“பேதையாம் அறிமால் தோண்டு
பித்துரை பகரும் புத்தற்
கேதுயாம் இன்று சோல்வ
தென்றுபின் னிது புகன்றார்”

அறிமால் கொண்டவர்கள் எக்காலத்துங் கொண்டது விடாமையாகிய குணம் பூண்டவர்களாதலினாலே; அவர்கள் தாம் விஷயங்களை உள்ளபடி விளங்கிப் பிறர்க்குப் புகட்டமாட்டாராயும், விஷயம் விளங்கிய பிறர் தமக்குத் தெருட்டுவதைத் தாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள மனமில்லாராயும் இடர்ப்படுவர்; இப்படியான அறிமால் கொண்டவர்களால், இக்காலத்திலே நஞ்சமய சாத்திரங்களும் புராணங்களும் நீதிநூல்களும் பெரிதும் விபரீதமாக்கப்படுகின்றன என்பதைநேரிற் காணலாம்.

“குருவில்லா வித்தைபாழ்” என்றவாறு எந்த நூலையும் தக்க உபாத்தியாயனை, குருவையடைந்து அடங்கியமைந்து படித்தறிதல் வேண்டுமென்பது வடமொழி தென்மொழி மரபாகும்; இக்காலத்திலே பலர் இப்படிப் படித்தற்கு மனங்கொள்கின்றிலர்; இதுமாத்திரமல்லாமல், தமிழ்நூலைத் தமிழ்மொழி மரபின்படியும், வடமொழி நூலை வடமொழி மரபின்படியும் படித்தற்குஞ் சிந்திக்கின்றிலர்; ஆரம்பத்திலேயே சிலர் தந் தாய்மொழியாகிய தமிழை அலட்சியஞ் செய்துவிட்டு, ஆங்கிலத்தைப் பயிலத் தலைப்பட்டு அம்மொழியில் ஒரு அளவிற்கு அறிவு வந்தபின், அதுவாயிலாகத் தமிழ்நூல்களைப் படிக்கவும், ஆராய்ச்சிசெய்யவும், ஆசங்கை நிகழ்த்தவும் தலைப்படுகின்றார்கள். மேலும் இவர்கள் கருவிநூல்களாகிய நிகண்டு இலக்கணம் முதலியவற்றையும் படித்தற்குச் சிரமங்கொள்ளார்கள்.

இவர்கள் எழுதும் விபரீத நூல்களில், இல்லையேல், செய்யும் பிரசங்கங்களில் எவரேனும் விஷயமறிந்தவர் குற்றங்தெரித்துக் கூறின் குதாக்கத்தினால் வெல்ல முயல்வார்கள்; ஆசங்கை நிகழ்த்தவோர் அறிவுடையராயிருப்ப, அதனால் இவர்கள் பேசுங் குதர்க்கம் அவர்கள்பாற் செல்லாதொழிய, இவர்கள் குறித்த நூல்களிலே இடையில் தவறு நேர்ந்திருக்கக் கூடும். இல்லையேல் அது இடைச்சொருகலாயிருக்கவேண்டுமென ஆற்றுஞாயம்பேசத் தலைப்பட்டு அவமதிப்படைவர்; நூல்களை, ஞானசாத்திரங்களை முறைப்படி கற்றவர்களிடத்தில் இவர்கள் தம் விபரீதக் கொள்கைகளைப் புகுத்துதல், நிலைநாட்டல் முடியாதெனினும், கல்வி யறிவிற் குறைந்த சாமானிய மக்களிடத்தில் இவர்கள் தம் விபரீதக் கொள்கைகளைப் புகுத்தி அவர்களிடத்துள்ள சமயப்பற்று தாய்மொழிப் பற்றைக் கெடுத்து வருகிறார்கள். இவ் விபரீதக் கல்வி, கொள்கையுடையாரைக் காட்டிலும் கல்லாதவர் நனி நல்லரெனலாம்; இப்படியானவர்களுடைய விபரீத வலையுள் சாமானிய மக்கள் அகப்பட்டு மாண்டுபோகாது காத்தல் பேரறிவாளர் கடனாகும்.

---

### யாழ்ப்பாணம் நகரசபை

8 பேர் ஏககாலத்திலிருந்தாற் கூட்டம் கூடி நடத்தலாம்

யாழ்ப்பாண நகரசங்கத்தில் குறைந்த கணக்கு 8 பிரதிநிதிகள் சமுகமாயிருந்தால் மேற்படி சங்கக் கூட்டம் கூட்டி நடத்தலாம் என்று பாராளுமன்றக் கூட்டத்தில் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றதாம்

### கந்தபுராணம் திருக்கல்யாணப் படிப்பு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில், மேற்படி சபையின் சைவாச்சிரம நாவலர் மண்டபத்தில் நடைபெற்று வரும் கந்தபுராண படனத்தில், (சுவாமி) திருக்கல்யாணப் படிப்பு வருகிற ஞாயிற்றுக் கிழமை (8-4-51) மாலை 6½ மணி தொடக்கம், சிறப்பாக நடைபெறும்.

### திருக்கணித பஞ்சாங்கம்

அடுத்து வரும் கர வருடத்திற்காகிய திருக்கணித பஞ்சாங்கம், மட்டுவில் பிரமஸ்ரீ. சி. சுப்பிரமணிய ஐயரால் நுட்பமாகக் கணித்து தமது ஜோதிஷ்பிரகாசக அச்சியந்திரசாலையில் அச்சிட்டு வெளிவந்துள்ளது. விலை ஒன்றேகால் ரூபா; இது 61-வருடப் பதிப்பாகும்; எமது பார்வைக்குதவிய பஞ்சாங்கப் பிரதியின் பொருட்டு நன்றி கூறுகின்றோம்.

## உலகம்பலவிதக்கதை

### “நீதியுங்கணவனும் நேர்படினுந்தந்தம் விதியின் பயனே பயன்”

“இப்படியுஞ் செய்யலாமா! இட்டமில்லையென்றால் முந்தியே தெரிவித்திருக்கலாம்; இந்த மாப்பிள்ளையை நாங்களாகத் தேடிப் போனோமா? இல்லையே! தாங்களே அந்த நாள் தொட்டு எங்கள் பெண்ணுக்கு வேறெங்கேனும் கல்யாணம் பேச வேண்டாம், வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய் தேடவேணேன்; சொந்த மைத்துனன்; B. A. பரீட்சையிற் சித்திபெற்றவன்; அல்லாமலும் ஒருபெரியகல்லூரியில் உயர்தர வகுப்பு உபாத்தியாயராகக் கடமை பார்க்கிறான்; உங்கள் பெண்ணும் ஆங்கிலமும் தமிழும் நல்லாகப் படித்திருக்கிறாள்: கல்யாணமானால் கல்வியைக்கொண்டு இரண்டுபேரும் பிழைப்புத் தேடிக் கொள்ளலாம் என்று இப்படியெல்லாம் உனது தமயனார் சொன்னாரே, வருகிற புதன்கிழமை கல்யாணத்திற்கு நாள் நிச்சயித்திருக்க, ஆகவேண்டிய ஆயத்த மெல்லாஞ் செய்திருக்க, கடைசி நேரத்தில் உன் அண்ணன் மகன், தனக்கு விடுமுறை நாள் கிடைக்கவில்லை, கல்யாணத்தைத் தவணையிடலாம் என்று கடிதமெழுதினால், அது சரியா? முறையா? கல்யாணம் நடத்துவதென்றால் சின்னக் காரியமா? நினைத்தவுடனே செய்யத்தக்கதா? எனக்கு ஒன்றும் புலப்படவில்லை” என்று கவலையோடு ஏகாம்பரநாதர் தமது மனைவியாகிய காமாட்சிக்குச் சொல்லிக் கலங்கினார். “எல்லாமறிந்த நீங்கள் இப்படிக் கவலைப்பட்டால், பெண்ணைப் பெற்ற நான் இன்னும் அதிகமாக வல்லவோ துயரப்பட வேண்டும்; அல்லாமலும் எங்கள் மகள் உலக விவகாரம் ஒன்றும் அறியாதவள்; அவள் இதையறிய நேர்ந்தால் இன்னமும் அதிகமாகக் கவலைப்படுவாளே; இந்த நாளுக்குச் சந்தியாவிட்டால், இன்னுமொரு நாளைப் பார்ப்பித்து நிச்சயித்துக் கல்யாணத்தை நடத்தலாமே! இதற்கெல்லாம் ஏன் கவலைப்படுகிறீர்கள்; இப்பொழுது என்ன கெட்டுப்போய்விட்டது? எங்கள் மகளை மணஞ்செய்ய மருமகன் மறுத்துவிட்டானா? அப்படியானால் உண்மையாகக் கவலைப்பட வேண்டுந்தான்; ஆண்டவன் கிருபையால் அப்படி யொன்றும் நேரவில்லையே; நாங்கள் தாம் அந்த மாப்பிள்ளை வேண்டாமென்று விட்டாலும், அந்தப்பிள்ளை தன மச்சாளையல்லாமல் வேறு எந்தப் பெண்ணையுங் கல்யாணஞ் செய்யச் சம்மதிக்கமாட்டான்; அப்படியே எங்கள் மகளும் அந்தப் பிள்ளையை யல்லாமல் வேறு எந்த மாப்பிள்ளைக்கும் உடன்படாள்: ‘நீதியுங் கணவனும் நேர்படினுந் தந்தம் விதியின பயனே பயன’ என்பது நீங்கள் அறியாததல்ல; கவலைப்படாதீர்கள்” என்று தன் கணவனுக்குத் தேறுதல் சொன்னாள் காமாட்சி.

### “மனந்தடுமாறேல்”

“என்னவோ, நீ இப்படியெல்லாஞ் சமாதானஞ் சொல்லுகிறாய்; என்னைத் தேற்றப் பார்க்கிறாய்; ஆனால் என்மனம் என்னையறியாமல் இந்தக் கருமத்திற் சஞ்சலப்படுகிறது; இந்தச் சம்பந்தத்திற்கு ஏதும் இடையூறு நேருமோ என்று உள்ளம் பயப்படுகிறது; இந்தக்காலத்து வாலிபரை எப்படி நம்பியிருக்கலாம்? கன்னிகைகளை எவ்வாறு காத்திருக்க முடியும்? ஒரு கூட்டத்திலேயோ, இல்லையேல் ஒரு சங்கீதக் கச்சேரியிலேயோ, இல்லாவிட்டால் ஒரு பரிசளிப்புக் கூட்டத்திலேயோ, அதுவுமில்லையானால், ஒரு கார்னிவல் கொண்டாட்டத்திலேயோ பாடக்கூடிய ஆடக்கூடிய ஆங்கிலம் நல்லாய்ப் பேசக்கூடிய கூச்சமின்றி நடமாடக்கூடிய ஒரு கன்னிகையை இக்கால வாலிபன் ஒருவன் காண நேர்ந்தால், கண்டு பேசநேர்ந்தால், அவனுக்கும் அவளுக்குஞ் சம்மதமானால், அவர்களே தங்களுட் கல்யாணத்தை நிச்சயித்துக் கொண்டு, மெல்ல மெல்லத் தங்கள் நோக்கத்தைப் பெற்றோருக்கு வெளியிடுங் காலமல்லவோ, பெண்ணே! இந்தக் காலம்” என்று பெருமூச்சுடன் சொன்னார் ஏகாம்பரம். “அப்படியும் இந்தக்காலத்தில் உண்டுதான்; ஆனால் என அண்ணன் மகன் அப்படிப்பட்டவனல்லன்; கல்லெல்லாம் மாணிக்கக்கல்லாமோ; எங்கள் பிள்ளையை யல்லாமல் வேறொரு கன்னிகையைக் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டான்; அவன் சற்குணன்; பொறுமை, அடக்கம், தெய்வபத்தியுடையவன்; அல்லாமலும் எங்கள் மகளைத் தன்னுயிர் போற பாவித்து அன்பு பாராட்டி நடக்கிறான்; இவளும அந்தப்பிள்ளையிடத்தில் அப்படியே அன்பும் விசுவாசமும் வைத்திருக்கிறாள்; நாங்கள இப்படிச் சந்தேகப்படுகிறோமென்பதை எங்கள மகள் அறிய நேர்ந்தாலும அவள பெரிதுங் கவலைப்படுவாள்; இப்படியெல்லாமிருக்க நீங்கள் ஏன் வீணாகக் கவலைப்படுகிறீர்கள? யோசிக்கிறீர்கள்? இல்லாததை இருக்கிறதென்றும், நடவாததை நடந்ததென்றும நினைத்துக் கவலைப்படலாமா? எல்லாம் எங்கள் எண்ணத்திலேயா தங்கியிருக்கின்றன? பரமசிவனெண்ணப்படிதான் எதுவும் நடக்கும். இவ்வளவுகாலமும் பொறுத்த நாங்கள் இன்னும் ஒரு கிழமை, இரண்டு கிழமை பொறுத்திருக்கவொண்ணாதா, “மனந் தடுமாறேல்” என்ற முதுமொழி நீங்கள் அறியாததா?” என்று மீட்டுஞ் சமாதானஞ் சொன்னாள் காமாட்சி; கேட்ட ஏகாம்பரம் ஒருவாறு மனம் ஆறியிருந்தார்.

### ஒரு நல்ல மனுஷன்

இப்படியிருக்க, அன்று மத்தியானத்தின் மேல், காமாட்சியினுடைய தமயன், பேசி நிச்சயித்த மாப்பிள்ளையாகிய பத்மநாதனுடைய தகப்பனை விசுவலிங்கம் தன் மைத்துனன் வீட்டிற்கு வந்தார்; அவர் வரவைக்கண்ட ஏகாம்பரமும் காமாட்சியும் அவரை வழக்கம்போல் உபசரித்து ஆசனமுதவி யிருக்கச் செய்தார்கள்; விசுவலிங்கம் ஒரு நல்ல மனுஷன்; பெருந்தன்மையானவர்; படித்தவர்; பழையகொள்கைபூண்டவர்; செல்வஞ் செல்வாக்கோடு கூடியவர். ஈதல், இரக்கம், பிறர்க்குதவி செய்தல், முதலிய சுகுணங்களும் நற்செயல்களும் பூண்டவர்; எந்த வேளையுங் கந்தவேளை வழிபடும் நியதிபூண்டவர்; இவருடைய மனைவியின் பெயர் விசாலாட்சி; பத்மநாதன் இவர்களுக்கு ஒரேயொரு மகன்; தங்களுக்கு ஒரு பெண்குழந்தையில்லையே யென்று கவலைப்பட்டுக்கொண்டிருந்த இவர்களிருவரும், காலகதியில் தங்கள் சொந்த மருமகளாகிய வனசாட்சியைத் தம மகளாகப் பாவித்து அவளிடத்து அன்பு பாராட்டித் தங்கள் மகனுக்கு அப்பெண்ணை மணாவற் கல்யாணஞ் செய்து வைக்கவேண்டு மென்று யோசித்தே கலியாணத்திற்கு அடுத்த புதன் கிழமையைச் சுபமுகூர்த்தமாக நிச்சயஞ் செய்து, ஆகவேண்டிய ஆயத்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு வெள்ளாக்தெருவில் உத்தரவுபெற்று அடைவு பிடிக்கும் எஸ். செல்வத்துரையின் கடையில் அடைவு வைத்துத் தவணை தப்பியிருக்கும் பின்வரும் நகைகளை 1951-ம் ஆண்டு ஏப்றில் (சித்திரை) மாதம் 11-ந் திகதி (11-4-51) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் கடையிலிருந்து ஏடுபட்ட நகை நீக்கி மிகுதி ஏலத்தில் விற்கப்படும்.

### நகையின் விபரம்

| இ. | திகதி | ரூ. | நகை விபரம் | பேயர் | விலாசம் |
|---|---|---|---|---|---|
| 450 | 9-1-48 | 60 | பென்றன | ம. செல்லன் | வெள்ளாக்தெரு. |
| 671 | 8-6-48 | 10 | 1 சோடி தோலை, 1 மோதிரம் | இ. பஞ்சாட்சரம் | வண். கிழக்கு |
| 700 | 23-8-48 | 40 | கல் புரூச்சு | பொ. இராசரத்தினம் | பிரபபக்குளம் |
| 448 | 8-1-48 | 20 | கல்வைத்த மோதிரம் | M. சின்னையா | தொல்புரம் |

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை, 2-4-1951
M. 2. 6, 10—4—51.

## இந்து ஆலய விசாரணைச் சபையாரின் அறிக்கை தமிழில் வெளிவர வேண்டும்

ஐயா,

மேற்சொல்லிய அறிக்கையை விசாரணைச்சபையார் ஆங்கிலத்தில் எழுதி, உள்நாட்டு மந்திரியாருக்குச் சமர்ப்பித்துள்ளார்கள். அம்மந்திரியார் அவ்வறிக்கையை இரு பிரிவுகளாக, ஆங்கிலத்தில் தனித்தனி அச்சிட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனி ஐந்துருபா விலையும் விதித்து வெளியிட்டிருக்கின்றனர். ஆனால் இவ்வறிக்கை இலங்கையிலுள்ள சைவத் தமிழ் மக்கள் எல்லாரும் படித்து அறியத்தக்கதாக இல்லை. ஏனெனில், ஆங்கிலம்படித்த ஒருசிலர்மாத்திரந்தான் இதைப்படிக்கக்கூடியதாயிருக்கின்றது. ஆதலினால் கனம் உள்நாட்டு மந்திரியார் இலங்கையிலுள்ள எல்லாச் சைவத் தமிழ் மக்களும் படித்தறியத்தக்கதாகத் தமிழில் இவ்வறிக்கையை எழுதி அச்சிட்டு வெளியிடுதலே பெரிதும் பொருத்தமுடையதாகும். சட்டம் வகுக்குமுன், அச்சட்டத்தின் அடிப்படையான கருத்துக்களையெல்லாம் பொதுசனங்கள் நன்கு அலசி ஆராய்ந்து அறியவேண்டும். அப்படி அவர்கள் ஆராய்வதற்கு அவர்களுடைய சொந்தப் பாஷையாகிய தமிழ்ப் பாஷையிலேயே மேற்படி அறிக்கை வெளிவரவேண்டும்; அத்துடன் இலகுவாக எல்லாரும் பெற்றுப் படிக்கும்படி விலையையும் சிறிது ஏற்றமின்றி விதித்தல் வேண்டும். மேற்படி விசாரணை நடத்திய சபையாரும், சாட்சியம் சொன்னவர்களும், அச்சட்டத்தால் வரவிருக்கும் நன்மை தீமைகளை அனுபவிக்க இருப்பவர்களும், அதனை வாசித்து அறிந்து அச்சட்டத்தில் அபிப்பிராயம் சொல்லவேண்டியவர்களும் சைவத் தமிழ் மக்களேயாவர். ஆதலினால் கௌரவ உள்நாட்டு மந்திரியார் தயைகூர்ந்து குறித்த அறிக்கையைத் தமிழ் மொழியில் எழுதி அச்சிட்டுச் சுலபமான விலையில் எவரும் பெறத் தக்கதாகச் செய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
கா. சேனாதிராசா
சைவமகாசபைத் தலைவர்

சுழிபுரம்
8—4—51

## சமயப் பணியின் பண்பு

1-ம் பக்கத் தொடர்ச்சி

வொழுக்கமுடைய சான்றோரும் இறைவனடிக்கும் தெய்வகலம்தரும் சமயத் துறையில் எத்தனை ஆழ்ந்த நம்பிக்கையும பணிவும் பக்தியும் கொண்டு பயிலவேண்டுமெனபதைக் கூறத் தேவையில்லை.

ஆகவே ஆதிமுதல் ஆழ்ந்த சிந்தனையால் கண்ட இறையுண்மையை இன்னும் நெருங்கி அணுகி நலன் பெறும் பயிற்சியில் ஏற்பட்ட வேத ஆகம புராண சம்பிரதாயங்களை மிக மிக அமைதியோடு ஆழ்ந்த விசால நோக்குடன் ஆராய்ந்து சமய தத்துவத்தைப் பயின்ற வாழ்க்கை நலம் பெற்றுய்ய ஒவ்வொருவரும் தீவிரமாக முயற்சித்தல் இக்கால் மிக இன்றியமையாத கடமையாம்.

தொண்டன.

## நயினுதீவு நாகபூஷணி அம்மன் கோவில் திருப்பணி

மேற்படி கோவிலின் உள்வீதிக் கொட்டகை வைரக்கற்றூண் வேலையாக நடைபெற்று வருகிறது. அம்பாளினதும் பரிவார மூர்த்திகளதும் பண்டிகைகள் இந்திய சிறப்ப நிபுணர்களால் வெகுசிறப்பாக அமைக்கப்படுகின்றன. அம்பாளின் கும்பாபிஷேகம் சித்திரை மாச முற்பகுதியில் நடைபெற விருக்கிறது. திருப்பணிக்கு கொடுதவ விரும்பும் மெய்யன்பர்கள் நேரே சிறஸ்ரீஸ் சபைதனுதிகாரிக்கு அனுப்பி பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்,
கோவில் தர்மகர்த்தாக்கள்

நயினுதீவு
21—3—51.
M 245 30-3-51 6, 13, 20-4-51

## புங்குடுதீவு கண்ணகையம்மன் கோவில்

கண்ணகை அம்மன் என வழங்கிவரும் இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நிகழும் விகிர்தி ஹு பங்குனிமீ 30-ந் திகதி வியாழக்கிழமை துவஜாரோகணமாகும்; கர வருஷம் சித்திரைமீ 7-ந் திகதி சகடபிஷேகமும், 8-ந் தேதி தேர் தீர்த்தமும், 9-ந் தேதி பூங்காவன உற்சவமும் நடைபெறும்.

—அடிக.

## உலகம் பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

தங்களையுஞ் செய்தார்கள்; இதற்கிடையில இவர்களுடைய மகனுகிய பத்மநாதன தான் படிப்பிக்கும் கல்லூரியில் வருடாந்தப்பரீட்சை சமீபித்துவிட்டதால் தனக்கு விடுமுறை கான கிடைக்கவில்லையென்ற காரணங்காட்டியெழுதி யிருக்கதான். அதையிட்டு யோசித்தே ஏகாம்பரம் கவலைப்படக் காமாட்சி சமாதானஞ் சொல்லித் தன் கணவனை ஒருவாறு தேறச் செய்தாள்; இப்படியிருக்கும்போதுதான மாப்பிளளையின் தகப்பன் சிவலிங்கம அங்கே வந்தார்; எனறும் முகமலர்ச்சியோடு வரும சிவலிங்கம் அன்று யாத்திரம் முகவாட்டத்தோடு வரக் காணப்பட்டார். தன் மாமனூரினருள். தலைவாசலில் வந்திருப்பதையறிந்த வனசாட்சியும் வந்து தலைவாசலுக்கு அடுத்த அறையின் வாசலில் ஒதுங்கி

[வரும்]

## நமது சோதிடப் பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (8-4-51—14-4-51)

மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இந்த வாரத்திலே சங்கடமான கருமமுண்டேல் ஆராய்ந்து செய்க. சகயீனமும் நேரக்கூடும். செய்துவந்த தொழிலைச் செய்கதொழியப் புதிய கருமங்களைத் தொடங்கவொண்ணுது.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம் 1, 2-ம் பாதம்

இக்கிழமை தொடக்கம் கருமங்களெல்லாம் நலமாக வரும். நன்மைக்காகிய மாறுதல்களும், குடும்ப ஒற்றுமையுமுண்டு. பெண்களால் ஆண்களுக்கும் ஆண்களால் பெண்களுக்கும் உதவியும் சம்மானமுமுண்டு.

மிதுனராசி மிருகசிரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

எடுத்த கருமத்தை ஊக்கத்தோடு செய்க. பொதுக்கருமங்களிலே தலையிட்டால் குறைகேட்கவேண்டி வரும்.

கடகராசி புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

புதிய கருமங்களைத்தொடங்க வாய்த்த வாரம். எதிரிகளை வெல்லவும், பகைவர்களைச் செயிக்கவும் இடமுண்டு. குடும்பத்தின் மனராம்மியமும், நண்பரால் உதவியும், வியாழக்கிழமைக்குப் பின் உண்டு.

சிங்கராசி மகம், பூரம், உத்தரம், 1-ம பாதம்.

ஏதும் வியாச்சியமிருந்தால் அவதானமாய் நடந்துகொள்ளவும். இனனும் உதவிசெய்யக்கூடிய ஒரு நண்பரோடு பிணக்கு நேரும். யோசியாமல் கதையும் சொல்ல வேண்டாம்.

கன்னிராசி உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

இவ்வாரத்தின் முதலிரண்டு நாளும் அவதானமாய் நடந்துகொள்ளவும். செவ்வாய்க் கிழமைக்குப்பின் கருமங்கள் நன்மையாய் வரும். இன்னும் சில காலத்திற்குப் புதிய கருமங்களை யோசித்துச் செய்யவும்.

துலாம் சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

ஆராய்வுடன் கூடாடினுல் அநுகூலமுண்டு. திங்கட்கிழமை பிறபகல் தொடக்கம் புதன்கிழமை முடிய அவதானமாய் நடந்துகொள்ளவும். சில காலம் முதியோருக்கொதுங்கி வாழ்க.

விருச்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை

பண விஷயமாக அநுகூலமானவாரம். சத்துருக்களைச் செயித்தலும் மனஆறுதலுமுண்டு. ஆனால் இவ்வாரத்தின் பிற்பகுதியில் அவதானமாக நடந்துகொள்க. புது வருடத்தில நன்மையுண்டாம்.

தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

புதிய முயற்சிகளுக்கு அநுகூலமான வாரம். சங்கடம் நேர்ந்தவிடத்து சக்தியில் உதவி கிடைக்கும். கிழமை முடிவில் எவ்வகையான பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளவொண்ணுது.

மகரராசி உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

அதிக சிரமப்பட்டுக் கருமம் ஆற்றியும் நியாயம்பேசியும் அனுகூலமடைய வேண்டியிருக்கிறது. இந்தக்கிழமையும் அயலார் சுற்றத்தாரோடு மாறுபட மனம் தோன்றும் செலவும் அதிகப்படும்.

கும்பராசி அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2-ம் 3-ம் பாதம்

பணவருவாய் விஷயமாக அனுகூலமான வாரம். ஆனல் கிழமை முழுவதும் முயற்சியும் சிரமமுண்டு. திட்டமிட்ட கருமங்கள் கிழமை முடிவில் அனுகூலமடையும்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

இந்த வாரத்தில் எவரோடும் நியாயம் பேச வேண்டாம். புதுக்கருமங்களுக்கு வாய்த்த கிழமை. சனசமூகசேவையிலும் சித்தியுண்டு. கிழமையின் பிற்பகுதியில் பிறர் கருமம் பார்க்கவேண்டி வரும்.

## திருச்சி ரேடியோ

* இசைத்தட்டு

வெள்ளி ஏப்ரல் 6

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 அண்ணாமலைகர் வி வேதவல்லி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு

1 சதம்பம்* 1 30 ஆங்கிலத்திலசெய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 டி சொடையா வயலின் 2 தமிழில்செய்தி 2 10 உறையூர் டி வி சுப்பிரமணியம் பாட்டு 2 45 முடிவு

மாலை 5 30 மன்னார்குடி எஸ் வைத்தியநாதபிள்ளை நாகஸ்வரம் 5 45 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 திங்கள்கேட்டவை* 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 7 30 சமூகசித்திரம்: தொடர்கதை 7 45 இலக்கியவாசகம் 8 அண்ணாமலைநகர் வி வேதவல்லி பாட்டு 8 30 குரல்வளை 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 மன்னார்குடி எஸ் வைத்தியநாதபிள்ளை நாகஸ்வரம் 10 முடிவு

சனி ஏப்ரல் 7

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 எஸ். டி. ராஜப்பா பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்திரகானம்* 8 30 முடிவு.

1 நீங்கள் கேட்டவை* 1 30 ஆங்கிலத்திலசெய்தி 1 40 ஹிந்தியில செய்தி 1 50 குரல்வளை* 2 தமிழில செய்தி 2 10 சித்ரகானம்* 2 45 முடிவு.

மாலை 5 30 திக்ருபா 5 45 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 ரேடியோ வாத்ய கோஷ்டி 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 ஆந்திரதேச நாட்டுப பாடல்கள் 9 ஆங்கிலத்தல் செய்தி 9 15 ஆங்கிலத்தில்... 9 30 வடஇந்திய சங்கீதம் ஒலிப்பதிவு 10 முடிவு.

ஞாயிறு ஏப்ரல் 8

காலை 7 10 ஆரம்பம்* 715 தமிழில் செய்தி 7 30 ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்தில செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 கும்பகோணம் எ டி. சுல்தான் பாட்டு 12 45 டி. ஆர். மஹாலிங்கம் புல்லாங்குழல்* 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்திலசெய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 என் ஜீ கிட்டப்பா* 2 தமிழில் செய்தி 2 10 சித்ரகானம்* 2 30 சென்டு இசை நிகழ்ச்சி 3 முடிவு.

மாலை 5 30 கடத்தூர் வெங்கடேசய்யர் வீணை 5 45 என். வி. ருக்மிணி பாட்டு 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நீங்கள் கேட்டவை* 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 ப்ரலன்ஞ* 7 45 ராகங்களின வரலாறு பேச்சு 8 கவியணைப் பத்திரிகை நாடகம் 8 30 கும்பகோணம் எ. டி. சுல்தான் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கடத்தூர் வெங்கடேசய்யர் வீணை 10 முடிவு

திங்கள் ஏப்ரல் 9

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 எம் ஆர் தர்மாம்பாள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்திரகானம்* 8 30 முடிவு.

1 நீங்கள் கேட்டவை* 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 லக்ஷ்மி லோகசுப்ரமணியம்* 2 தமிழில் செய்தி 2 10 எம் ஆர் தர்மாம்பாள் பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 ராமநாதபுரம் எம் என் நடராஜபிள்ளை புல்லாங்குழல் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 திருச்சி வாத்ய கோஷ்டி 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 தொழிலாளர் பேச்சு 8 ராமநாதபுரம் எம் என் நடராஜபிள்ளை புல்லாங்குழல் 8 30 இசைத்தட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 மாயூர் என் ராஜமாணிக்கம் பாட்டு 10 முடிவு

## கற்றவர்க் கழகு கசடற மொழிதல்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

## 60-ம் ஆ. வச்சிர விழா

# கா ணி வ ல்

மே மீ 2 ந்வ — 13 ந்வ

உலகப் பிரசித்தி பெற்ற மாயாவி

கோஜியா பாஷாவின்

மாயாஜாலங்கள் ஆடல்பாடல்கள் அருங்கலைக்காட்சிகள்

மின்சாரதீப  வேடிக்கை  விநோதங்கள்

உள்ளங் கவரும் இன்னும் அனேக காட்சிகள்!

இராணி "பிறுண்ட்"



13½ அங்குலம்    14 அங்குலம்

கல்விக்கோட்டை ஓட்டுக் கம்பனியாரால் ஆக்கப்படும்

கொளுக்கி ஓடுகள்

ஏனைய ஓடுகளைக் காட்டிலும் கூடிய காலத்திற்கு உபயோகப்படுவன; கசிவில்லாதன. அரசினர்க்குரிய ஸ்தாபனங்களிலும் இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள மாளிகைபோன்ற வீடுகளுக்கும் உபயோகிக்கப்படுவன

ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பார்க்கலாம்

V. ராஜசேகரம்    சேகரம் அன்ட் சன்ஸ்

சொந்தக்காரர்    74/4 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம்

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எசசந்தி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட சேமப்பணம்

சேமப்பணம் 3 மாசம, 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாய்ப்பான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம் இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

Std. 14 20-11-46—20-11-49    S. கனகசபை  பிரப்பர்.

## பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம்

உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன்

விலை ரூபா 2-00

சிவராத்திரிவிரத மான்மியம்

சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரதத்தின் உற்பத்தி, இதனை அநுட்டிக்கவேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசனநடையில் விளக்குவது; விரத காலத்தில் ஓதுதற்குரிய தோத்திரங்களுடன்.

விலை சதம் 15

வில்லி பாரதம்-புட்ப யாத்திரைச் சருக்கம்

பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நண்பொருள் விளக்க விரிவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ் ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைக்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு அச்சில)

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம்

மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது.

விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்

மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயபாடப் பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாகவிதிக்கப்பட்டது.  விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக் கதை I. (கோபால நேசரத்தினம்)

மேற்படி பண்டிதர் எழுதியது. படிக்கப் படிக்கத் தெவிட்டாதது.

விலை ரூ. 1—25 ச.

சைவ சமயசாரம்:

ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றுயுள்ளது.  விலை சதம் 45

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்)

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கில மறிந்தோர் எவரும் படிக்கத் தக்கது. முந்தி வெளிவராதது.

விலை 60 சதம் (அணா 10)

முற்பண மனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்

Apply: to

PANDIT V. T. SAMBANDHAN

Vannarponnai, Jaffna.

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட மூலதனம் | | 7, 500, 000-00 |
| கொடுக்கவிருக்கும் | ,, | 4, 500, 000-00 |
| கொடுபட்ட | ,, | 4,500, 000-00 |
| நிலைதரமான சேமநிதி | | 3, 000, 000-00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்டல்வீதி, கொழும்பு.

நியூயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸ்ற் கம்பனி.

லண்டன் காரியாலயம்:- 4-6-8 லூட் கேட் சிர்கஸ் லண்டன்.E. C. 4.

கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை,(கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழையநகரமண்டபம்),வதுளை மட்டக்களப்பு.

யாழ்ப்பாணத்துக்காரியாலயம்:-242ஆஸ்பத்திரிரோட்,யாழ்ப்பாணம்

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள இவ்வங்கி செய்து கொடுக்கின்றது.

நடைமுறைக் கணக்கு: இலங்கையில் (திருக்கோணமலை வதுளை மட்டக்களப்பு ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப்பெற்றுக் கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்: ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு: இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்: அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று: இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பீறநாட்டுவிவகாரப்பகுதி: ஜீ.ஓ.எச்.கட்டிடம், யோர்க்வீதி,கொழும்பு.

இந்தியா, மலாய் நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

L. P. N. சிங்கம்  ஏஜெண்டு

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press, Vannarponnai, Jaffna, on Friday April 6, 1951